**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 449 of 2025

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : செல்லக்கனி

Father's Name : நல்லசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கோவை பீடம்பள்ளியில் குடியிருந்து கொண்டு செப்டிக் டேங்க் அமைத்து தரும் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.12.2019 ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு மேல் நான் எனது கடையில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது டமார் என சத்தம் கேட்டது. நான் என்னவென்று பார்க்க எதிர் திசையில் லாரி கடையின் மேல் கவிழ்ந்து இருந்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது விபத்தில் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த நிர்மலா தேவி அவர்கள் உடல் முழுவதும் லாரி ஏறி தலை நசுங்கிய நிலையில் இருந்தார். ஆம்புலன்ஸ் மூலம் அவரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். காவல் ஆய்வாளர் என்ன விசாரித்தார்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 18.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.45 மணி அளவில் பாப்பம்பட்டி பிரிவு ரோட்டில் பழைய இரும்பு கடை அருகில் நின்று கொண்டிருந்த பொழுது அவ்வழியாக ஒரு பெண் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அவர் பின்னால் லாரி அதிவேகமாகவும் தாறுமாறாகவும் ஒட்டி வந்து பெண் ஓட்டி வந்த வண்டியில் மோதி பின்னர் கடை முன்பு நின்று கொண்டிருந்த எக்ஸ் எல் சூப்பர் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டது என்றும் மேலும் லாரி கடையின் மீது கவிழ்ந்த நிலையில் இருந்தது என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்று பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:09:24 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**